பொதுவாக இந்த நிகழ்ச்சி வேதனையையும், வருத்தத்தையும் தரக் கூடிய நிகழ்ச்சியாகும். இது தற்செயலாக ஏற்பட்ட நிகழ்ச்சியா ? ஏன் இப்படி ஏற்பட்டது ? என்பவைகளையெல்லாம் கண்டுபிடிக்க ஈடு பட்டிருக்கிற காரணத்தாலும், இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாலும் எந்த அளவிற்கு அரசு அக்கறை காட்டி வருகிறது என்பது தெரியவருகிறது. ஆகவே இந்தப் பிரச்சினையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டா மென்று கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, பேரவையின் பிற அலுவல்களை ஒற்றி வைத்து இதை விவாதிக்கத் தேவையில்லையென்று கூறி, அனுமதி தர மறுக்கிறேன்.

(3) அரசினர் தீர்மானம்

விதி 41 [3]ஐத் தளர்த்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவை 41 [3] விதியின் கீழ் அவை முன்னவர் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்: "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 41 [3]-வது விதியின் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

(4) கவன ஈர்ப்பு

(அ) கோவை மாவட்டத்தில் பருவமழை தவறியதால் ஒத்திவைக்கப் பட்டிருந்த மூன்றாண்டுக் கடனைத் திருப்பி கட்டவேண்டிய நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சு. துரைசாமி, திரு. மு. கண்ணப்பன், திரு. இரா. மாணிக்கவாசகம் ஆகியோர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மூவரும் ஒரே பொருளைப் பற்றிக் கொடுத்திருப்பதால், அவர்களில் ஒருவரான திரு. சு. துரைசாமி அவர்கள் மட்டும் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர அனுமதிக் கிறேன்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவை யின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

> "கடந்த மூன்றாண்டுக் காலமாக பருவமழை தவறியதை முன்னிட்டு கோவை மாவட்டத்தில் அரசாங்கக் கடன்களை இரண்டு ஆண்டுக்காலமாக ஒத்திவைக்கப்பட்டிருந்து, இந்த ஆண்டில் மூன்றாண்டுகளுக்கு உண்டான முழு கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்பதால், பொதுமக்களும் விவசாயிகளும் பாதிக் கப்படுகின்றனர்".

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, the Government have considered that due to failure of rains again, acute distress prevtils in several parts of the Coimbatore district. Orders have already been issued to the Collector to postpone collection of

all Government loans and land revenue dues for a period of six months in the areas where the Collector is satisfied after a personal assessment that owing to failure of rains, acute conditions prevail and warrant such postponement. The Collector has also been asked to send immediately to the Government particulars of places where the grant of this concession has become necessary.

(ஆ) வட ஆற்காடு, மதுரை, கோவை, திருச்சி, இராமநாதபுரம், தஞ்சை, செங்கல்பட்டு, நெல்லை மாவட்டங்களில் பருவமழையின்மையும், அரசு கடன் வசூலை ஒற்றிவைத்தலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்.—அடுத்து, திரு. வி. கே. கோதண்டராமன், திரு. இல. பலராமன், திரு. எ. சி. நரசிம்மன், திரு. என். வரதராஜன், திரு. கே. என் குமாரசாமி, திரு. என். மருதாசலம், திரு. சி. கந்தசாமி கவுண்டர், திரு. கே. என். சாமிநாதன், திரு. கரு சீமைச்சாமி, திரு. எ. அ. சுப்பராஜா, திரு. பி. எஸ். தனுஷ்கோடி, திரு. கொளத்தூர் கோதண்டம், திரு. என். துரைபாண்டியன், திரு. நா. சௌந்தரபாண்டியன் ஆகியோர் ஒரே பொருளைக் குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, சட்டப் பேரவை 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேரும் படிப்பதற்குப் பதிலாக, நானே இந்த அவைக்கு அதைப் படித்துவிடுகிறேன்.

> "வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கல்பட்டு, மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பருவமழை தவறியதால் மேற்படி மாவட்டங்களில் அரசாங்கக் கடன்களை ஒத்தி வைக்க வேண்டும்".

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, இம் மாநிலத்தின் சில பகுதிகளில், அதாவது, வட ஆற்காடு, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், தஞ்சாவூர், செங்கல்பட்டு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மிகக் கொடிய வறட்சி நிலவுவதாக அரசு கருதுகிறது. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர்களின் அறிக்கைகளின் மேல் அத்தகைய பகுதிகளில் அரசுக்குச் சேரவேண்டிய நிலுவைகளை மெதுவாக வசூலிக்கும் கொள்கையை பின்பற்றும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து குறிப்பிட்ட அறிக்கை எதுவும் வரப் பெறுவிடினும், அவர்கள் பொறுப்பில் உள்ள குறிப்பிட்ட பகுதிகளில் மழையின்மை காரணமாக மிகவும் மோசமான வறட்சி நிலை இருப்பதாகத் தாங்கள் சரிவர அறிந்த பின் இதைப் போன்ற கொள்கையைப் பின்பற்றவும், ஏனைய மாவட்ட ஆட்சித் தலைவர்களை அனுமதித்து ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

அத்தகைய பகுதிகளைக் கொண்ட பட்டியல் ஒன்றை உடனடியாக அரசுக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ) வட ஆற்காடு, கோவை மாவட்டங்களில் பருவமழையின்மையும், துயர் தணிப்புப் பணிகள் துவங்க வேண்டியதன் அவசியமும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

> "வட ஆற்காடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் பருவமழை தவறியதால் அப்பகுதிகளில் உடனடி பஞ்ச நிவாரண வேலைகள் துவங்க வேண்டும்".